வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம்
व.उ.चिदम्बरनार पत्तन न्यास
V.O.Chidambaranar Port Trust
(Ministry of Ports, Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate,Tuticorin - 628 004.
Tamilnadu
Public Relations Office

Tele Fax : 0461-2352360
Email id : provocport@gmail.com
Website : www.vocport.gov.in

Press Release No.5 Date : 02.08.2021

**V.O. Chidambaranar Port contributes COVID-19 Medicines worth Rs. 17.50 lakhs to Government Thoothukudi Medical College Hospital**

Today on 02.08.2021, V.O. Chidambaranar Port contributed COVID-19 Medicines worth Rs. 17.50 lakhs, to Government Thoothukudi Medical College Hospital, and a high-end multifunctional printer to Primary Health Centre, Mullakadu village.

Shri T.K. Ramachandran, IAS, Chairman, V.O. Chidambaranar Port Trust, formally handed over the COVID-19 medicines worth Rs. 17.50 lakhs to Dr. D. Nehru, Dean, Government Thoothukudi Medical College Hospital and a high-end multifunctional printer to the officials of Primary Health Centre, Mullakadu village, in the presence of Shri Bimal Kumar Jha, Deputy Chairman, Shri Praveen Kumar Singh, Deputy Conservator & Secretary (ST), Shri K. Ravikumar, Chief Engineer & Chief Medical Officer (ST), and other senior officials of the Port and the Government Thoothukudi Medical College Hospital, at the Port’s Administrative Office.

The COVID-19 pandemic has disrupted the global economy and its rippling effect has impacted all communities and businesses around the world and the maritime sector is no exception to this. In this fight against COVID-19 pandemic, V.O. Chidambaranar Port, as a socially responsible organization, has taken every possible initiative to supplement the efforts of Ministry of Ports, Shipping and Waterways, Government of India.

Earlier this year, in the wake of urgent health care requirements of Government Thoothukudi Medical College Hospital to combat COVID, V.O. Chidambaranar Port donated COVID-19 medical equipments worth Rs. 40.50 Lakhs to the Government Thoothukudi Medical College Hospital. In addition, the Port has also donated Personal Protective Eqiupments like N95 masks, Gloves, goggles, viral transport media kit etc., worth Rs.1.05 lakhs.

The Port has also earlier contributed Rs. 2 Crore to the Prime Minister’s Citizen Assistance & Relief in Emergency Situation (PM CARES Fund) and Rs. 50 Lakhs to the Chief Minister’s Public Relief Fund. Port Officers and Staff have also contributed their one day’s salary of Rs. 14.79 lakhs towards PM CARES fund.

Speaking on the occasion, Shri T.K. Ramachandran, Chairman, V.O. Chidambaranar Port Trust, stated that the Port is fully committed in serving the society through its Corporate Social Responsibility (CSR) initiatives. He complimented the Medical fraternity, the Doctors, Paramedical Staff and the entire medical team of the Government Thoothukudi Medical College Hospital and Primary Health Centre, Mullakadu, which are rendering excellent health care in combating COVID.

Dr. D. Nehru, Dean, Government Thoothukudi Medical College Hospital, in his address stated that the Government Thoothukudi Medical College Hospital is thankful to the Port for the contribution of medicines and medical equipments, which have helped the hospital in saving the lives of many patients during this COVID Pandemic.

The above details were released in the Press Release by V. O. Chidambaranar Port Trust, today.

Public Relations Officer

வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம்
व.उ.चिदम्बरनार पत्तन न्यास
V.O.Chidambaranar Port Trust
(Ministry of Ports, Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate,Tuticorin - 628 004.
Tamilnadu
Public Relations Office

Tele Fax : 0461-2352360
Email id : provocport@gmail.com
Website : www.vocport.gov.in

மக்கள் தொடர்பு அலுவலகம்

பத்திரிக்கை செய்தி எண் : 5 தேதி:02.08.2021

**வ.உ. சிதம்பரனார் துறைமுகம் தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு ரூபாய் 17.50 இலட்சம் மதிப்பிலான கொரோனா தடுப்பு மருந்துகளை வழங்கியது.**

இன்று 02.08.2021 வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம், கொரோனா பெருந்தொற்று காரணமாக அரசு கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு சிகிச்சைகாக வரும் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் ரூபாய். 17.50 இலட்சம் மதிப்புள்ள கொரோனா தடுப்பு மருந்துகளையும், தூத்துக்குடி மாவட்டம் முள்ளக்காடு கிராமத்திலுள்ள ஆரம்ப சுகாதார மையத்தின் பயன்பாட்டிற்காக பல செயல்பாட்டு வசதி கொண்ட பிரிண்டரையும் (Multifunctional Printer) சமூக பெறுநிறுவன திட்டத்தின்கீழ் வழங்கியுள்ளது.

திரு தா.கி. ராமச்சந்திரன், இ.ஆ.ப., வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகத் தலைவர் அவர்கள் திரு. பிமல்குமார் ஜா, வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழக துணை தலைவர், கேப்டன் பிரவின்குமார் சிங், துணை பாதுகாவலர் மற்றும் செயலர் (பொறுப்பு), திரு. கே. ரவிகுமார், தலைமை பொறியாளர் மற்றும் தலைமை மருத்துவ அதிகாரி (பொறுப்பு) மற்றும் துறைமுக மூத்த அதிகாரிகள் மற்றும் அரசு மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை மருத்துவர்கள் அவர்களின் முன்னிலையில் வ.உ.சிதம்பரனார் துறைமுக நிர்வாக அலுவலகத்தில் வைத்து டாக்டர். டீ. நேரு, முதல்வர், தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை அவர்களிடம், 17.50 இலட்சம் மதிப்புள்ள கொரோனா தடுப்பு மருந்துகளை வழங்கினார்கள்.

கொரோனா பெருந்தொற்று உலகளவில் வர்த்தகத்தில் ஏற்படுத்தியுள்ள பெரும் பாதிப்பு அனைத்து சமூகங்களிலும் வர்த்தகத்தை பாதித்துள்ளது, இதற்கு கடல்சார் வர்த்தகமும் விதிவிலக்கல்ல. கொரோனா பெருந்தொற்றை எதிர்த்து போராடி கொண்டுடிருக்கும் இச்சூழலை கருத்தில் கொண்டு மத்திய துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் நீர்வழி போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் வ.உ. சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம், பெருநிறுவன சமூக பொறுப்பு செயல்பாட்டின் கொள்கையின்படி சமுதாயத்தை மேம்படுத்துவதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

கடந்த வருடம் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் கொரோனா கட்டுபடுத்துவதற்கு ரூபாய் 40.50 இலட்சம் மதிப்பிலான பல்வேறு மருத்துவ உபகரணங்கள் வ.உ.சிதம்பரனார் துறைமுகம் வழங்கியுள்ளது, கூடுதலாக ரூபாய் 1.05 இலட்சம் மதிப்பிலான தனிபட்ட பாதுகாப்பு உபகரணங்கள் N-95 முககவசங்கள், கையுறைகள் மற்றும் பல்வேறு உபகரணங்களை வழங்கியுள்ளது.

மேலும் பாரத பிரதமரின் கொரோனா நிவாரண நிதிக்காக ரூபாய் 2 கோடி (PM Cares Fund) துறைமுகம் சார்ப்பாக வழங்கப்பட்டது. மேலும் தமிழக முதலமைச்சரின் பொது நிவாரணநிதிக்காக ரூபாய் 50 இலட்சம் வழங்கப்பட்டது. வ.உ.சிதம்பரனார் துறைமுக அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் ஒரு நாள் ஊதியத்தை பாரத பிரதமரின் கொரோனா நிவாரண நிதிக்காக (PM Cares Fund) ரூபாய் 14.79 இலட்சத்தையும் வழங்கியுள்ளது.

திரு தா.கி. ராமச்சந்திரன், இ.ஆ.ப., வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழக தலைவர் இவ்விழாவில் கலந்து கொண்டு கூறுகையில், சமுதாயத்தின் மேம்பாட்டிற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் சமூக பெறுநிறுவன திட்டத்தின்கீழ் செயல்படுத்தி வருகிறது என்று கூறினார். மேலும், தூத்துக்குடி அரசு கல்லூரி மற்றும் மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள் கொரோனா காலத்தில் ஆற்றிய சிறப்பான சேவையினை பாராட்டினார்.

திரு. டாக்டர் டி. நேரு, முதல்வர், தூத்துக்குடி அரசு மருந்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை அவர்கள் தனது உரையில் வ.உ.சிதம்பரனார் துறைமுகம், கொரோனா காலத்தில் தக்க சமையத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை வழங்கியதன் மூலம் பல்வேறு உயிர்களை காப்பாற்ற பெரிதும் உதவியாக இருந்தமைக்கு நன்றி தெரிவித்தார்.

மேற்கண்ட தகவலை வ.உ. சிதம்பரனார் துறைமுகப் பொறுப்புக் கழகம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி